# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC. 8 / 2024

## PW-1

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாள் திங்கட் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3 ன் படி 16.02.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | குணசுந்தரி | **தொழில்** | : | வீட்டுக்குடித்தனம் |
| **க/பெ.** | : | சுரேஷ் குமார் | **வசிப்பிடம்** | : | தலைவாசல் |
| **வயது** | : | 33 | **தாலுக்கா** | | சேலம் |

**குறுக்கு விசாரணை** :

1) பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு எனக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்ததா என்றால் நடந்தது. எந்த தேதியில் நடந்தது என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. திருமணத்திற்கும் முன்பும், நிச்சயதார்த்தத்தின்போதும் எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து எங்களிடம் எந்த சீர் வரிசையும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நிச்சயதார்த்தத்திற்கு பின்னர் நான் எதிர்மனுதாரரிடம் திருமணத்திற்கு பின்னர் தனிகுடித்தனம் வைப்பதாக இருந்தால்தான் நான் திருமணத்திற்கு சம்மதிப்பேன் என்று நிபந்தனை வைத்தேன் என்றால் சரியல்ல.

2) ரொக்க பணம் மற்றும் நகை கொடுத்தால்தான் இந்த திருமணம் நடக்கும் என்று திருமணம் நடந்த அன்று எதிர்மனுதாரர் தரப்பில் ஏதேனும் நிபந்தனை விதித்தார்களா என்றால் இல்லை. திருமண செலவுகளை எதிர்மனுதாரர்தான் பார்த்துக்கொண்டார்கள். திருமணத்திற்கு பின்னர் நான் எவ்வளவு நாட்கள் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தேன் என்றால் இடையிடையே பிரச்சனை ஏற்பட்டது. மொத்தத்தில் ஒரு வருடம் கூட நான்

சரியாக எதிர்மனுதாரர் வீட்டில் வசித்ததில்லை.

3) திருமணத்திற்கு சீர் வரிசை பொருட்கள் வேண்டாம் என்றும், அதற்காக ரூ.2 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் அந்த பணத்தை கொடுத்தோம் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை, ஆனால் கொடுத்தோம். திருமணத்திற்கு பின்னர் எனக்கு தேவையான செலவுகளை எதிர்மனுதாரர் பார்த்துக்கொண்டாரா என்றால் எனக்கும், குழந்தைக்கும் எதிர்மனுதாரர் இதுவரையில் எந்த செலவுகளையும் செய்யவில்லை. நான் செலவுக்கு என்ன செய்தேன் என்றால் திருமணமாகி ஒரு வருடத்தில் என்ன செலவு ஆகிவிடப்போகிறது, ஆடைகள் எதுவும் எடுத்துக்கொடுத்ததில்லை மற்றும் என்னை வெளியில் எங்கும் அழைத்து சென்றதில்லை.

4) நான் எனது மனுவில் எதிர்மனுதாரர் நான் அழகாக இல்லை என்று குறிப்பிட்டும், வேறொரு பெண்ணை திருமணம் செய்துக்கொண்டிருந்திருக்கலாம் என்றும் கூறினார் என்று நான் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் என்னை உடல் ரீதியாக பேசி கிண்டல் செய்தார்கள். சிதம்பரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்திருந்தேன் என்றாலும், அந்த புகாரின் பேரிலான விசாரணையின்போது எனது புகாரில் உண்மை தன்மை இல்லாததால்தான் என்னை எதிர்மனுதாரர்களுடன் சென்று சேர்ந்து வாழுமாறு போலீசார் அறிவுரை கூறினார்கள் என்றாலும், நான்தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும், நீதிமன்றம் சென்று நிவாரணம் தேடி கொள்கிறேன் என்றும் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்தான் என்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் மேலும் என்னுடைய உடைகள் மற்றும் சீர் வரிசை பொருட்களை என்னிடம் கொடுக்க முடியாது என்றும், வேண்டுமானால் நான் நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்து சீர் வரிசை பொருட்களையும், உடைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு எதிர்மனுதாரர் சத்தம்போட்டு கூறிவிட்டார்.

5) திருமணத்திற்கு பின்னர் நான் கருவுற்ற பின்னர் எப்போது எனது தாயார் வீட்டிற்கு சென்றேன் என்றால் நான் 6 வது மாதம் கருவுற்றிருந்தபோது சென்றேன். எதிர்மனுதாரரிடம் என்னுடைய வளையகாப்பை விமர்சியாகசெய்ய சொன்னேன் என்றாலும், அதற்கு எதிர்மனுதாரர் தனக்கு கடன் இருப்பதால் சாதாரணமாக செய்துக்கொள்ளலாம் என்று கூறினார் என்றாலும், நான் அதை ஏற்க மறுத்து சண்டையிட்டுக்கொண்டுதான் எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் பிரச்சனை செய்ததால்தான் நான் அவ்வாறு சென்றேன். என்னுடைய மருத்துவ ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை கூட அவர்கள் பிடுங்கி வைத்துக்கொண்டார்கள்.

6) எனக்கு வளைகாப்பு நடத்தியதை எதிர்மனுதாரருக்கு கூறினோமா என்றால் கூறினோம். அவர்களால் அங்கு வர முடியாது என்று கூறிவிட்டார்கள்.

**(எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது).**